**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 775/2023**
**வழக்கு சாட்சி PW–1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சாமி | தாலுகா | : | தென்காசி |
| தந்தை பெயர் | : | காளி | தொழில் | : | கூலி |
| கிராமம் | : | ஆயிரப்பேரி | வயது | : | 53 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of July 31st, 2025.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் ஆயிரப்பேரியில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு பொங்கல் திருவிழா நடந்தது. சாயங்காலம் 06.00 மணிக்கு என்னுடைய மகன் மகேஷ் தெரு வழியாக போய் கொண்டிருந்தார். 1, 2 எதிரிகள் என்னுடைய மகனை அடித்துள்ளார்கள். என்னுடைய மகனை எதிரி இராமையா வீட்டின் முன்பு வைத்து அடித்துள்ளார்கள். என் மகன் எனக்கு தகவல் சொன்னார். நான் இரவு 08.15 மணியளவில் சம்பவயிடத்திற்கு சென்றேன். என் மகனை கையால் தான் அடித்துள்ளார்கள். நானும், மாரிச்செல்வமும் அங்கு சென்றோம். எங்களை பார்த்தவுடன் எதிரிகள் தேவடியா மவன்களே, உங்களை உயிரோடு விடமாட்டேன் என்று கூறி, லைட் வெளிச்சத்தில் வைத்து அரிவாளை வைத்து எதிரி சுரேஷ் என்னுடைய இடது பக்க கழுத்திலும், இடது பக்க முகத்திலும், இடது கையிலும் வெட்டி விட்டார். எதிரி தினேஷ்

தடுக்க வந்த மாரிச்செல்வத்தை அரிவாள் வைத்து மாரிச்செல்வத்தின் இரண்டு கைகளிலும் வெட்டி விட்டார். எதிரி இராமையா இரும்புக்கம்பியால் தலையிலும், தோள்பட்டையிலும் அடித்தார். லிங்கத்துரை, முருகேசன் ஆகியோர்கள் சத்தம் போட்டார்கள். தாயோலிகளா, இதோடு போய் விடுங்கள், இல்லையென்றால் வெட்டி புதைத்து விடுவேன் என்று கூறினார்கள். லிங்கத்துரையும், முருகேசனும் எங்களை தென்காசி அரசு மருத்துவமனைக்கு அழைத்து கொண்டு சென்றார்கள். அங்கு ஒரு வாரம் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். மாரிச்செல்வத்தை மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். தென்காசி அரசு மருத்துவமனைக்கு போலீசார் வந்தார்கள். விசாரித்தார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1** ஆகும். என்னிடம் காண்பிக்கப்படும் அரிவாளால் வைத்து தான் எதிரி என்னை வெட்டினார். அந்த அரிவாள் **சா.பொ.1** ஆகும். என்னிடம் காண்பிக்கப்படும் கம்பியால் தான் எதிரி ராமையா என்னை அடித்தார். அந்த கம்பி **சா.பொ.2** ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> –

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.08.01 18:28:42 +0530

**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 775/2023**
**வழக்கு சாட்சி PW-2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மாரிச்செல்வம் | தாலுகா | : | தென்காசி |
| தந்தை பெயர் | : | காளியப்பன் | தொழில் | : | கூலி |
| கிராமம் | : | ஆயிரப்பேரி | வயது | : | 26 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of July 31st, 2025.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் ஆயிரப்பேரியில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். சாட்சி சாமி எனக்கு சித்தப்பா உறவு முறை. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு பொங்கல் திருவிழா நடந்தது. என்னுடைய அண்ணன் மகேஷ் வேகமாக வண்டியில் வந்தார் என்று எதிரிகள் அடித்துள்ளார்கள். மகேஷ் என் சித்தப்பா சாமியிடம் இதைப் பற்றி சொன்னார். அப்போது, சாயங்காலம் 06.30 மணியிருக்கும். இரவு 08.00 -08.15 மணியளவில் நானும், என் சித்தப்பாவும் எதிரிகள் வீட்டிற்கு சென்றோம். லைட் வெளிச்சத்தில் வைத்து எதிரி சுரேஷ்குமார் என் சித்தப்பாவை தேவடியா மவனே என்று கூறி, அரிவாள் வைத்து முகத்திலும், கழுத்திலும், கையிலும் வெட்டினார். நான் தடுக்க சென்றேன். அப்போது, எதிரி தினேஷ்குமார் அரிவாளால் என்னுடைய இரண்டு கைகளிலும், தோள்பட்டையிலும், தலையிலும் வெட்டினார். இராமையா கம்பி வைத்து என் சித்தப்பாவை தலையிலும், தோள்பட்டையிலும், கையிலும் அடித்தார். என்னையும், என் சித்தப்பாவும்

ஒரு ஆட்டோவில் லிங்கத்துரை, முருகேசன் ஆகியோர்கள் தென்காசி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். என்னை மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். நான் 4 மாதங்கள் சிகிச்சையில் இருந்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் அரிவாள்கள் வைத்து தான் எதிரிகள் எங்களை வெட்டினார்கள். அந்த அரிவாள் **சா.பொ.3** ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை** –

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.08.01 18:28:52 +0530